ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1833/26 - 2013 ඔක්තෝබර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.24

*1833/26 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச.வ.பீ. 63/51* (II).

**அதியுத்தமராம் சனாதிபதியினாலான பிரகடனம்**

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ.

(284 ஆம் அத்தியாயமான) இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்விதிகளின் ஏற்பாடுகள் 2013 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென இப்பிரகடனம் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு, செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

சனாதிபதியின் செயலாளர்.

*ச.வ.பீ. 63/51* (II).

**(284 ஆம் அத்தியாயமான) இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டம்**

(284 ஆம் அத்தியாயமான) இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியம்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2013, செப்தெம்பர் 30.

விதிகள்

*2009 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 1623/5 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகளின் மூலம் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 1984 ஆம் ஆண்டின் யூலை மாதம் 6 அந் திகதிய 305 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகள் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-*

1. (15) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விதியை இடுவதன் மூலம் :-

"தங்கி வாழுநர்க் கானமரணப் பணிக்கொடை.

(15) 1. (அ) உறுப்பினர் ஒருவருக்கு அந்த உறுப்பினரின் வாழ்க்கைத்துணை, 18 வயதுக்கு குறைந்த திருமணம் செய்யாத மகன், ஏதேனும் வயதினரான திருமணம் செய்யாத மகள், அந்த உறுப்பினரின் பெற்றோர் ஒருவர், வாழ்க்கைத் துணையின் பெற்றோர் ஒருவர், உறுப்பினரொருவரின் பெற்றோர், வாழ்க்கைத் துணையின் பெற்றோர் ஒருவர் அல்லது பிரவசத்தில் குழந்தையொன்று இறக்கும் பட்சத்தில், அத்தகைய உறுப்பினரால் எழுத்திலான ஒரு வேண்டுகோள் ஒன்றுடன் சேர்த்து மரண அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிப்பதன் மேல் மரணப் பணிக்கொடையாக ( ரூபா 20,000/-) ரூபா இருபதாயிரம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) உபபந்தி (அ) என்பதன் கீழ் செலுத்தப்பட்ட மரணப் பணிக்கொடையானது பொது உறுப்பாண்மையிடமிருந்து சம பங்குகளில் அறவிடப்படுதல் வேண்டும் .

(15) 2. (அ) உறுப்பினர் (15) ஆம் விதியின் 1 ஆம் பந்தியின் (அ) என்னும் உபபந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான வேண்டுகோளுடன் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) இறந்த வாழ்க்கைத் துணைக்காக மரணப் பணிக்கொடை கோருகின்ற பட்சத்தில், உறுப்பினரின் திருமண சான்றிதழ் ;

(ii) இறந்த குழந்தையொன்று தொடர்பில் மரணப் பணிக்கொடையைக் கோருகின்ற பட்சத்தில், இறந்த குழந்தையொன்றின் பிறப்பு சான்றிதழ் ;

(iii) இறந்த பெற்றோரொருவரின் மரணப் பணிக்கொடையைக் கோருகின்ற பட்சத்தில், உறுப்பினரின் பிறப்பு சான்றிதழ் ;

(iv) இறந்த சட்டவழிப் பெற்றோர் ஒருவருக்காக மரணப் பணிக்கொடையைக் கோருகின்ற பட்சத்தில், வாழ்க்கைத் துணையின் பிறப்பு சான்றிதழ் மற்றும் உறுப்பினரின் திருமண சான்றிதழ் ; அல்லது

(v) பிரசவத்தின் போது குழந்தையொன்றின் இறப்பு தொடர்பில், மரணப் பணிக்கொடையை கோருகின்ற பட்சத்தில், இறந்து பிறந்த சான்றிதழ்.

(ஆ) உறுப்பினர் 1 ஆம் பந்தியின் (அ) என்னும் உப - பந்தியிலும் 2 ஆம் பந்தியின் (அ) என்னும் உப பந்தியிலும் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களுடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) வேலை செய்யும் இடத்தின் தலைவரின் சான்றிதழ் ; அத்துடன்

(ii) உறுப்பினருக்கும் இறந்தவருக்கும் இடையிலான உறவை சான்றுறுதிப்படுத்தி உறுப்பினர் நிரந்தரமாக வதியும் இடப்பரப்பின் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரினால் மேற் கையொப்பமிடப்பட்டதான கிராம சேவகரிடமிருந்தான கடிதமொன்று.

(இ) (i) இப்பந்தியின் கீழான மரணப் பணிக்கொடையானது, 1 ஆம் பந்தியில் (அ) என்னும் உபபந்தியிலும் மற்றும் 2 ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) என்னும் உப பந்திகளிலும் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்கள் கூட்டுத்தாபனத்தை திருப்திப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படும் வரை செலுத்தப்படுதல் ஆகாது.

(ii) உறுப்பினர் கூட்டுத்தாபனத்தின் திருப்திக்கு தேவைப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள அல்லது சமர்ப்பிக்க முடியாதவிடத்து, கூட்டுத்தாபனமானது, இறந்தவருடனான உறுப்பினரின் உறவுமுறையை எண்பிப்பதில் வேறு ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு உறுப்பினரை வேண்டுவதற்கு உரிமையைக் கொண்டுள்ளது என்பதுடன் அத்தகைய ஆவணங்களின் திருப்திப்படுதலின் மேல் மட்டுமே மரணப் பணிக்கொடையை செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) மரணப் பணிக்கொடையானது, வாழ்க்கைத் துணையொன்றின் இறப்புக்காக அல்லது முன்னைய திருமணமொன்றின் குலைவின் பின்னர் அல்லது முன்னைய வாழ்க்கைத் துணையின் இறப்பின் பின்னர் திருமணஞ் செய்த உறுப்பினரொருவரின் வாழ்க்கைத் துணையொன்றின் பெற்றோர் ஒருவரின் இறப்புக்காக அவ்வுறுப்பினர் அதுசார்பில்

ஏற்கனவே மரணப் பணிக்கொடையை கோரியிருப்பின், இரண்டாம் தடவையொன்றுக்குச் செலுத்தப்படுதல் ஆகாது.

(15) 3. பரிபூரண உறுப்பினர் ஒருவரினது தங்கிவாழுநர்கள் மரண பணிக்கொடை உரிமைக்கோரிக்கைக்கான உரிமையை கொண்டுள்ளனர்.

(15) 4. (அ) மரணப் பணிக்கொடையானது மரணம் சம்பவித்த திகதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் முகாமைக் குழுவிடமிருந்து கோரப்படுதல் வேண்டுமென்பதுடன் இறந்தவருக்கும் உறுப்பினருக்கும் இடையிலான உறவு முறையானது மரணம் சம்பவித்த திகதியிலிருந்து நூற்றியெண்பது நாட்களினுள் எண்பிக்கப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட தொண்ணூறு நாட்களின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பமானது அனுமதிக்கப்படுதலாகாது என்பதுடன் மரணப் பணிக்கொடையானது சொல்லப்பட்ட நூற்றியெண்பது நாட்களினுள் உறவுமுறையை எண்பிக்கத் தவறுகின்ற உறுப்பினருக்கு செலுத்தப்படுதல் ஆகாது ;

(ஆ) 8 ஆம் விதியின் (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உபபந்தியின் கீழ் உறுப்பாண்மையின் இடைநிறுத்தற் காலப்பகுதியின் போது நிகழ்ந்த உறுப்பினரொருவரின் இறப்பின் போது அவ்வுறுப்பினரின் உறுப்பாண்மையின் இடைநிறுத்தற் காலத்திலுள்ளவாறான மரணப் பணிக்கொடையின் 50 % மானது 14 ஆம் விதியின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க அவ்வுறுப்பினரின் தங்கி வாழ்பவர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(இ) 8 ஆம் விதியின் 4 ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அவ்வுறுப்பினரின் உறுப்பாண்மையின் இடைநிறுத்தலின் போது இவ்வுறுப்பினரொருவரின் தங்கிவாழுநரின் இறப்பின் போது செலுத்தப்படற்பாலதான மரணப் பணிக்கொடை தொடர்பில் ஏற்புடையாதாதல் வேண்டும் ;

(15) 5. (அ) தமது ஓய்வுபெறும் காலம் வரை ஏதேனும் மரணப் பணிக்கொடையை பெற்றிருக்காத உறுப்பினரொருவரின் விடயத்தின், மரணப் பணிக்கொடைக்கான உதவுதொகையின் எல்லா தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுமொத்த வட்டியான தவணைக் கொடுப்பனவுகளின் பத்து சதவீதமும் உறுப்பினருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மரணப் பணிக்கொடை தொடர்பிலான எல்லா அறவீடுகளும் மரணப் பணிக்கொடை கணக்குக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் புத்தகங்களில் தனிவேறாக்கப்படுதல் வேண்டும் ;

(15) 6. கூட்டுத்தாபனமானது மரணப் பணிக்கொடை கணக்குக்கு கூட்டுத்தாபனத்தின் வருடாந்த நிகர இலாபத்தின் பத்து சதவீதத்தை வரவு வைத்தல் வேண்டும்.

(15) 7. மரணப் பணிக்கொடை கணக்கில் வரவில் இருக்கும் பணமானது ஓர் அரச வங்கியில் நிலையான வைப்பொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(15) 8 ஏழாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நிலையான வைப்பிலிருந்து திரளும் வட்டியானது பின்வருவனவற்றுக்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) பதினைந்தாம் விதியின் 5 ஆம் பந்தியின் (அ) என்னும் உபபந்தியின் கீழ் உறுப்பினரொருவருக்கு ஏதேனும் பணத்தை மீளளித்தல் ; அத்துடன்

(ஆ) பதிநான்காம் விதியின் 2 ஆம் பந்தியின் கீழ் மரணப் பணிக்கொடையின் (கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்) குறித்த சதவீதத்தை செலுத்துதல்.".

2.(18) ஆம் விதியில் அதன் 4 ஆம் பந்தியை உடனடுத்துப்பின்னர் புதிய 5 ஆம் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :-

"நன்கொடை பாதுகாப்பு நிதியம்.

(18) 5. ரூபா பத்து இலட்சம் தொகையொன்று (ரூபா 10,00,000) நன்கொடைப் பாதுகாப்பு நிதியத்தின் கணக்கின் மீது கட்டளைச் சட்டத்தின் (23) ஆம் பிரிவின் நியதிகளின்படி வைப்பிலிடப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட நன்கொடை பாதுகாப்பு நிதியமானது அரச வங்கியொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் திரண்ட வட்டியானது பணிக்கொடையானது செலுத்தப்படுவதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அது முறையேயான ஆண்டுகளில் செலுத்தப்படுதல் வேண்டும்.".

3.(19) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய விதியை இடுவதன்மூலம் :-

"கௌரவப் பணிக்கொடை.

(19) 1. 8 ஆம் விதியின் 1 ஆம் பந்தியின் கீழ் கூட்டுத்தாபனத்தில் அவருடைய உறுப்பாண்மையை உறுப்பினர் ஒருவர் இழக்குமிடத்து, அத்தகைய உறுப்பினருக்கு மொத்தமாக அறுபதினாயிரம் ரூபாவை (60,000 ரூபா) (இதனகத்துப்பின்னர் கௌரவப் பணிக்கொடை எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) ஆறு

மாத காலப்பகுதிக்கென ஒவ்வொரு மாதமும் ரூபா பத்தாயிரம் தொகையொன்று (ரூபா 10,000) செலுத்தப்படுதல் வேண்டும்.

(19) 2. கௌரவப் பணிக்கொடையின் கொடுப்பனவானது (5) ஆம் விதியின் 1 ஆம் பந்தியின் கீழ் மற்றும் (18) ஆம் விதியின் கீழான நன்கொடை கொடுப்பனவின் கீழான மாதாந்த வரவுத்தொகையின் கொடுப்பனவை உடனடுத்து நிகழும் பஞ்சாங்க மாதத்திலிருந்து தொடங்குதல் வேண்டும்.

(19) 3 கௌரவப் பணிக்கொடையின் அல்லது அதன் பாகத்தின் கொடுப்பனவு ஒவ்வொன்றும் சேமிப்புக்கணக்கொன்றில் அத்தகைய உறுப்பினரின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(19) 4 (அ) கௌரவ பணிக்கொடையொன்றுக்கு உரித்துடையவராக வர விரும்புகின்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு இருநூற்றி ஐம்பது ரூபா (ரூபா 250) என்ற வீதப்படி ஆண்டொன்றுக்கு ரூபா மூவாயிரம் ( ரூபா 3,000 ) உதவு தொகையொன்றாகச் செய்தல் வேண்டும். கௌரவ பணிக்கொடை தொடர்பிலான எல்லா அறவீடுகளும் அரச வங்கியொன்றில் நிலையான வைப்பொன்றில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். நிலையான வைப்பிலிருந்து திரண்ட வட்டியானது கௌரவ பணிக்கொடை சேமிப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கௌரவ பணிக்கொடையின் கொடுப்பனவுக்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) உறுப்பாண்மையின் பத்து ஆண்டுகளை பூர்த்தி செய்து மற்றும் கௌரவப் பணிக்கொடையின் நூற்றி இருபது (120) தவணைக் கொடுப்பனவுகளை வழங்கியுள்ள உறுப்பினர் ஒருவர் (19) ஆம் விதியின் 1 ஆம் பந்தியின் கீழான கௌரவப் பணிக்கொடையை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ;

(இ) கௌரவப் பணிக்கொடைக்கு உரித்துடையவரான உறுப்பினரொருவரின் (8) ஆம் விதியின் 2 ஆம் பந்தியின் (அ) என்னும் உப பந்தியின் கீழ் இடைநிறுத்தப்பட்டு அத்தகைய உறுப்பினர் உறுப்பாண்மை விதி (8) இன் 1 ஆம் பந்தியின் கீழ் உறுப்பாண்மையை இழக்குமிடத்து 19 ஆம் விதியின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளை பூர்த்தி செய்வதன் மீது மற்றும் கௌரவப் பணிக்கொடையின் தவணைக் கொடுப்பனவுகளின் நிலுவையின் கொடுப்பனவின் மீது மட்டும் கௌரவப் பணிக்கொடைக்கு உரித்துடையவராதல் வேண்டும் ;

(19) 5. திருமணமான உறுப்பினரொருவரின் இறப்பின் மீது, அத்தகைய உறுப்பினரின் வாழ்க்கைத்துணை அத்தகைய உறுப்பினரின் கௌரவப் பணிக்கொடையை பெற்றுக்கொள்வதற்கு தகமையுடையவராதல் வேண்டும். உறுப்பினர் வாழ்க்கைத் துணையொன்றைக் கொண்டிருக்காதுவிடின் அத்தகைய உறுப்பினரால் நியமிக்கப்பட்ட ஆள் அத்தகைய கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராதல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆளொருவர் இல்லாதவிடத்து, முகாமைக்குழுவானது மிகவும் பொருத்தமான ஆளொருவருக்கு அத்தகைய கௌரவப் பணிக்கொடையைச் செலுத்துவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்விதியின் கீழ் முகாமைக்குழுவால் எடுக்கப்பட்ட முடிவானது இறுதியானதும் முடிவானதும் ஆக்கப்படுதல் வேண்டும்.

(19) 6 (8) ஆம் விதியின் கீழ் அவருடைய உறுப்பாண்மையை இழந்த எவரேனும் உறுப்பினர் (5) ஆம் விதியின் (1) ஆம் பந்தியின் கீழ் மாதாந்த உதவுதொகை மற்றும் (18) ஆம் விதியின் கீழான நன்கொடை என்பன அவருடைய இறுதிக் கணக்குளை தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லாதவிடத்து முகாமைக் குழுவானது கௌரவப் பணிக்கொடையிலிருந்து அத்தயை தேவைப்படுத்தப்பட்ட பணத்தை கழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(19) 7. முகாமைக் குழுவானது கௌரவப் பணிக்கொடை கொடுக்கல்வாங்கல்களுக்காக (284 ஆம் அத்தியாயமான) இலங்கைப் புகையிரத சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் நியதிகளின்படி வேறான கணக்கொன்றைப் பேணுதல்

வேண்டும் என்பதுடன் கணக்கின் வரவுக்கு ரூபா பத்து இலட்சம் (ரூபா 1,000,000) நிலுவையொன்றைப் பேணுதல் வேண்டும்.

(19) 8 (8) ஆம் விதியின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் கீழ் கூட்டுத்தாபனத்தில் உறுப்பாண்மையை உறுப்பினர் ஒருவர் இழக்குமிடத்தும் 19 ஆம் விதியின் 4 ஆம் பந்தியின் (ஆ) என்னும் உப பந்தியின் கீழான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாதவிடத்தும் கௌரவப் பணிக்கொடைக்கு உறுப்பினர் வழங்கிய உதவுதொகையில் எல்லா தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் அதிகரிக்கின்ற வட்டியான அத்தவணைக் கொடுப்பனவுகளின் பத்து சதவீதமானது உறுப்பினருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.".

4. (20) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய விதியை இடுவதன் மூலம் :-

"பாதுகாப்புப் பணிக்கொடை.

(20) (1) உறுப்பினரொருவரின் இறப்பில், 18 வயதுக்கு கீழ்ப்பட்ட எல்லா ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்புப் பணிக்கொடை ஒவ்வொருவருக்கும் ரூபா ஐயாயிரம் (ரூபா 5,000 ) செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) (20) ஆம் விதியின் 1 ஆம் பந்தியின் கீழான பாதுகாப்பு உபகாரப் பணம் இறந்த உறுப்பினரின் கணக்கை மூடுவதற்கு முன்னர் ஒவ்வொரு பிள்ளை தொடர்பில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அது தன்னியக்க மீளப் புதுப்பித்தலுக்கமைய தேசிய சேமிப்பு வங்கியில் தனியான நிலையான வைப்புகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். நிலையான வைப்புச் சான்றிதழ்களை ஒவ்வொரு பிள்ளையின் கட்டுக்காப்பிற்கு கையளிக்கப்படுதல் வேண்டும். வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படுதல் வேண்டுமென்ற கட்டளைக்கிணங்க நிலையான வைப்புகளை திறப்பதற்கு ஏதேனும் வசதியீனம் ஏற்படின், சேமிப்புக் கணக்குகளானவை அதன் சார்பில் பாதுகாப்புப் பணிக்கொடைப் பணத்தை வைப்பிலிடும் பொருட்டு திறக்கப்படுதல் வேண்டும்.

(3) ரூபா ஐந்து இலட்சம் தொகையொன்று (ரூபா 5,00,000 ) தனியான நிலையான வைப்பு கணக்கொன்றில் (இதனகத்துப்பின்னர் பாதுகாப்புப் பணிக்கொடை பாதுகாப்பு நிதியம்" எனக்குறிப்பீடு செய்யப்படுவதான) (20) ஆம் விதியின் 1 ஆம் பந்தியின் நியதிகளின்படி பாதுகாப்பு பணிக்கொடை ஒன்றின் கொடுப்பனவின் நோக்கத்துக்காக வைப்பிலிடப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட பாதுகாப்பு பணிக்கொடை பாதுகாப்பு பணிக்கொடை பாதுகாப்பு நிதியம் அரச வங்கியொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் முறையான ஆண்டுகளில் செலுத்தப்படும் பாதுகாப்பு கௌரவப் பணிக்கொடை கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்.".

5. (22) ஆம் விதியில் :-

(அ) அதன் 1 ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் :-

1. அத்தகைய உறுப்பினராக ஓராண்டைப் பூர்த்தி செய்கின்ற உறுப்பினரொருவரின் மீது கீழே தரப்பட்டுள்ளவாறான அவருடைய உறுப்பாண்மையின் காலப்பகுதிக்கு நேரொத்தான அத்தகைய தொகையில் விசேட கடனொன்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

| இல. | உறுப்பாண்மையின் காலப்பகுதி (ஆண்டுகளில்) | கடன்தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| 1. | 01- 05 | 7,500 |
| 2. | 05 - 10 | 15,000 |
| 3. | 10 - 15 | 20,000 |
| 4. | 15 - 20 | 30,000 |
| 5. | 20க்கு மேற்பட்ட | 40.000" அத்துடன் |

(ஆ) அதன் 5 ஆம் பந்திக்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"அட்டவணை (தொடர்ச்சி)

| இல. | கடன் தொகை | ஆறு மாதங்களில் (4 தவணைக் கொடுப்பனவுகள்) | பன்னிரெண்டு மாதங்களில் (10 தவணைக் கொடுப்பனவுகள்) | பதினெட்டு மாதங்களில் (16 தவணைக் கொடுப்பனவுகள்) | இருபத்தி நான்கு மாதங்களில் (22 தவணைக் கொடுப்பனவுகள்) | முப்பத்தாறு மாதங்களில் (34 தவணைக் கொடுப்பனவுகள்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7,500 | 1,875 | 750 | 475X15<br>375X 1 | | |
| | | 141 | 113 | 106 | | |
| 2. | 15,000 | 3,750 | 1,500 | 940X 15<br>900X 1 | 685X21<br>615X 1 | |
| | | 282 | 225 | 211 | 205 | |
| 3 | 20,000 | 5,000 | 2,000 | 1,250 | 910X21<br>890X 1 | 590X33<br>530X1 |
| | | 375 | 300 | 282 | 273 | 265 |
| 4 | 30,000 | 7,500 | 3,000 | 1,875 | 1,365X21<br>1,335X 1 | 885X33<br>795X 1 |
| | | 563 | 450 | 422 | 410 | 398 |
| 5 | 40,000 | 10,000 | 4,000 | 2,500 | 1,820X21<br>1,780X 1 | 1180X33<br>1060X 1 |
| | | 750 | 600 | 563 | 546 | 530" |

6. (23) ஆம் விதியில் (இ) மற்றும் (ஈ) என்னும் புதிய உப பந்திகளை அதன் 1 ஆம் பந்தியின் (ஆ) என்னும் உபபந்தியினை உடனடுத்துப் பின்னர் சேர்ப்பதன் மூலம் :-

"பாதுகாப்பு நன்கொடை.

"(இ) புகையிரதத் திணைக்களத்தில் அல்லது வேறு அரசாங்க திணைக்கங்களில் அல்லது நியதிச்சட்ட சபையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதோ, அல்லது அதிலிருந்து நீக்கப்பட்டிருந்தாலோ, உறுப்பினரொருவரிடமிருந்து திரட்டு நிதியத்துக்கு நிலுவைகள் எதுவும் வருமதியாகவிருக்கும் பட்சத்தில், திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவர் (6) ஆம் விதியின் 1 மற்றும் 2 ஆம் பந்திகளின் நியதிகளின்படி இத்திரட்டு நிதியத்தின் செயலாளரினால் மற்றும் பொருளாளரினால் எழுத்திலான வேண்டுகோளொன்று ஒரு தடவை செய்யப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களிடமிருந்து உறுப்பினரொருவருக்கு செலுத்தப்படும் எவையேனும் பணங்களிலிருந்து அத்தகைய எல்லா நிலுவைகளையும் அறவிடுவதற்கு இவ்விதியின் நியதிகளின்படி தத்துவமளிக்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) சொல்லப்பட்ட திணைக்களத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அத்தகைய உறுப்பினரொருவரின் வரவில் பணமெதுவும் இல்லாதிருப்பின், கூட்டுத்தாபனமானது சட்ட நடவடிக்கை முறைமையினால் தொகையை அறவிடுவதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.".

7. (24) ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விதியை இடுவதன் மூலம் :-

"நிலுவைகள்

(24). 1. உறுப்பினரெவரும் இயலாமை நிகழும் முன்னர் பாதுகாப்பு நன்கொடை நிதியத்துக்கு ரூபா இருநூறு தொகையொன்றை வழங்கினாலன்றியும் நிதியத்தின் உறுப்பினரொருவராக வந்த பின்னராக ஆறு மாத காலப்பகுதியொன்று முடிவடைந்த பின்னரும் பாதுகாப்பு நன்கொடைக்கு உரித்துடையவராதலாகாது.

(24) 2. மொத்தமாக நிரந்தரமாக ஊனமுற்ற ஒவ்வொரு உறுப்பினரும் பாதுகாப்பு நன்கொடையின் கீழ் ரூபா இருபதியாயிரம் (ரூபா 20,000 ) தொகையொன்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். நிரந்தர பகுதியளவிலாக ஊனமுற்ற பட்சத்தில், உறுப்பினரொருவர் பாதுகாப்பு நன்கொடையாக ரூபா பத்தாயிரம் தொகையொன்றுக்கு (ரூபா 10,000 ) உரித்துடையவராகப்படுதல் வேண்டும்.

(24) 3. இவ்விதியின் நோக்கங்களுக்காக :-

(அ) இரண்டு கால்கள், இரண்டு கைகள் மற்றும் இரண்டு கண்கள் இழப்பு அல்லது அத்தகைய பாகங்களின் தொழிற்பாட்டு இழப்பு உள்ளடங்கலாக மொத்தமாக நிரந்தர அங்கவீனம் ; அத்துடன்

(ஆ) ஒரு கை, ஒரு கால் மற்றும் ஒரு கண் இழப்பு அல்லது அத்தகைய பாகங்களின் இழப்பு உள்ளடங்கலான நிரந்தர பகுதியளவிலான இயலாமை.

(24) 4. ரூபா பத்து இலட்சம் (ரூபா 10,00,000) தொகையொன்று வேறாக (இதனகத்துப்பின்னர் "பாதுகாப்பு நன்கொடை நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) நிரந்தர வைப்புக் கணக்கொன்றில் (24) ஆம் விதியின் (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி பாதுகாப்பு நன்கொடையின் கொடுப்பனவின் நோக்கத்துக்காக வைப்பிலிடப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட பாதுகாப்பு நன்கொடை நிதியமானது அரச வங்கியொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் கோருகின்ற வட்டியானது பாதுகாப்பு நன்கொடை சேமிப்பு கணக்கொன்றில் ஆண்டுதோறும் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் பாதுகாப்பு நன்கொடையின் கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(24) 5 பாதுகாப்பு நன்கொடையானது எழுத்தில் முகாமைக் குழுவுக்கு செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது எவரேனும் உறுப்பினருக்கு செலுத்தப்படுதல் வேண்டும் . அது அரசாங்க மருத்துவ அலுவலர் மற்றும் அவருடைய திணைக்களத் தலைவரிடமிருந்தான தொடர்புடைய அறிக்கை என்பவற்றுடன் ஒன்றாகச் சேர்த்து விபத்து நடந்த திகதியிலிருந்து முந்நூற்றி அறுபத்தைந்து (365) நாட்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.".

11- 278



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.